**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**அசல் வழக்கு எண். 33/2015**

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 09 ஆம் நாள் வியாழக்கிழமை

பி.வா.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு.எஸ்.முத்துராமன்,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது. சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**DW-1**

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | மோகன்தாஸ் | த/பெ.: | மாரியப்பன் |
| கிராமம்: | சித்தமல்லி | தாலுக்கா: | முத்துப்பேட்டை |
| மதம்: | | தொழில்: | |
| வயது: | 55 | முகவரி: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of **09.10.2025.**

**முதல் விசாரணை :-**

நான் வழக்கில் 1ம் பிரதிவாதி ஆவேன். பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சி ஆவேன். என்னை வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா போடப்பட்டு முடிக்கப்பட்ட நிலையில், வழக்கானது வாதுரைக்காக ஒத்தி வைக்கப்பட்டது. அதன்பிறகு 20.06.2025ம் தேதியன்று என் தரப்பில் என்னை மீண்டும் அழைத்து வழக்கிற்கு முக்கியமான ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டும் என்று இடைக்கால மனு எண்கள். 2/2025 முதல் 4/2025 தாக்கல் செய்து அந்த மனுக்கள் அனைத்தும் 21.08.2025ம் தேதியன்று செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, அதனடிப்படையில் பின்வரும் ஆவணங்களை என் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | | |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.7 | 15.05.1987 | மாரியப்ப வள்ளாலதேவர் அவர்களால் நீலா ஆச்சி அவர்களுக்கு வழக்குரையில் காணப்பட்டுள்ள சொத்துக்களை பெந்தகக்கடன் ஏற்படுத்தியற்கான பதிவு செய்யப்பட்ட முத்துப்பேட்டை சார்பதிவாளர் அலுவலக ஆவணம் (எண்.547/1987) | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.8 | 22.06.1987 | மாரியப்ப வள்ளாலதேவர் அவர்களால் சுப்ரமணிய செட்டியார் அவர்களிடம் வழக்குரையில் காணப்பட்டுள்ள சொத்துக்களை பெந்தகக்கடன் | சான்றிட்ட நகல் |

| | | | |
|---|---|---|---|
| | | ஏற்படுத்திறய்தகான பதிவு செய்யப்பட்ட முத்துப்பேட்டை சார்பதிவாளர் அலுவலக ஆவணம் | |
| பி.வா.சா.ஆ.9 | 05.01.1989 | மாரியப்ப வள்ளாலதேவர் அவர்களால் சுப்ரமணிய செட்டியால் அவர்களிடம் வழக்குரையில் காணப்பட்டுள்ள சொத்துக்களை பெந்தகக்கடன் ஏற்படுத்தியற்கான பதிவு செய்யப்பட்ட முத்துப்பேட்டை சார்பதிவாளர் அலுவலக ஆவணம் (எண். 385/1989) | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.10 | 13.03.2016 | சுப்ரமணியன் அவர்கள் அம்பிகா அம்மாள் அவர்களுக்கு எழுதிக் கொடுத்த பெந்தகக்கடன் வரவு ரசீது, முத்துப்பேட்டை சார்பதிவாளர் அலுவலக ஆவணம் (எண். 260/2016) | அசல் |
| பி.வா.சா.ஆ.11 | 13.03.2016 | சுப்ரமணியன் அவர்கள் அம்பிகா அம்மாள் அவர்களுக்கு எழுதிக் கொடுத்த பெந்தகக்கடன் வரவு ரசீது, முத்துப்பேட்டை சார்பதிவாளர் அலுவலக ஆவணம் (எண். 261/2016) | அசல் |
| பி.வா.சா.ஆ.12 | 13.03.2016 | சுப்ரமணியன் அவர்கள் அம்பிகா அம்மாள் அவர்களுக்கு எழுதிக் கொடுத்த பெந்தகக்கடன் வரவு ரசீது, முத்துப்பேட்டை சார்பதிவாளர் அலுவலக ஆவணம் (எண். 262/2016) | அசல் |

வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

<u>வாதி குறுக்கு விசாரணை</u> - வழக்கறிஞரின் வேண்டுகோளின்பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,
சார்பு நீதிபதி,
மன்னார்குடி.